**சுருக்கம்**

சேலம் மாநகராட்சி – திடக்கழிவு மேலாண்மை திட்டம் – செட்டி சாவடி ஊராட்சிப் பகுதியில் அபிவிருத்திப் பணிக்காக 100 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு – குத்தகை அடிப்படையில் கட்டி, இயக்கி, மாற்றம் செய்தல் முறையில் குஜராத் சுற்றுச் சூழல் தடுப்பு மற்றும் உள்கட்டமைப்பு நிறுவனத்திற்கு வழங்க அனுமதி அளித்தல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (மாந2) துறை**

அரசாணை (நிலை) எண்.124 நாள்: 05.07.2010

படிக்கப்பட்டது:

1. சேலம் மாநகராட்சி ஆணையர் கடிதம் எண்.2496/05/திகமே/SS2, நாள் 25.07.2009 மற்றும் 22.09.2009.
2. நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடித எண்.ந.க.எண். 36310/ 2009–4 / தி4, நாள் 05.02.2010.

* * * * *

**ஆணை:**

மேலே படிக்கப்பட்ட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை, அவர்களின் கடிதத்தில் செட்டிச்சாவடி கிராம ஊராட்சிப் பகுதியில் நில அளவை எண்.6/2 இல் 40.490 ஹெக்டேர் (100 ஏக்கர்) “கரடு“ வகைபாடு உள்ள புறம்போக்கு நிலம் அரசாணை நிலை எண்.127, வருவாய் (நிமு7) துறை நாள்.13.03.2007 – இல் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்திற்காக சேலம் மாநகராட்சிக்கு நில உரிமை மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்றும் அந்நிலத்தில், முதற்கட்டமாக 25 ஏக்கர் நிலப்பரப்பில் நவீன விஞ்ஞான முறையில் குப்பைகளைத் தரம் பிரித்து உரமாக மாற்றம் செய்யவும், இதர உபயோகப் பொருட்களை தயார் செய்யவும் மற்றும் எஞ்சிய திடக்கழிவுகளை பாதுகாப்பான முறையில் நிலத்தடி நீர் மாசு ஏற்படாத வகையில் நிலத்தில் நிரப்புவதற்கு கட்டி, இயக்கி, மாற்றுதல் முறையில் தனியாருக்கு நிலத்தினை குத்தகை அடிப்படையில் வழங்க விரிவான மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

2. மேற்படி திட்டத்திற்காக சேலம் மாநகராட்சியால் தேசிய அளவில் ஒப்பந்தப்புள்ளி அட்டவணை தயார் செய்து, அறிவிப்பு வெளியிடப்பட்டதில், மூன்று தனியார் நிறுவனங்கள் ஒப்பந்தப்புள்ளிகள் வழங்கி உள்ளதாகவும் அந்நிறுவனங்களில் தொழில் நுட்ப தகுதிகளை ஒப்பந்த மதிப்பாய்வுக்குழு மூலம் கூர்ந்தாய்வு செய்து, குறைந்த ஒப்பந்தப்புள்ளிதாராக “ குஜராத் சுற்றுச் சூழல் தடுப்பு மற்றும் உள்கட்டமைப்பு நிறுவனம், சூரத் (M/s Gujarat Evironment Protection and Infrastructure Ltd, Surat) என்ற நிறுவனம் தேர்வு செய்யப்பட்டுள்ளதற்கும், மேற்படி மாநகராட்சி நிலத்தினை இருபது ஆண்டு காலத்திற்கு கட்டணமின்றி குத்தகை அடிப்படையில் வழங்க சேலம் மாமன்றம் தனது தீர்மானம் எண்.499 நாள்.27.02.2009 – இல் ஒப்புதல் வழங்கியுள்ளது என்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்கள் தெரிவித்துள்ளார். மேலும், சேலம் மாமன்றம் தனது தீர்மானம் எண்.174, நாள்.11.09.2009 – இல் குத்தகைக் காலமான 20 ஆண்டுகளுக்கு மேற்படி 25 ஏக்கர் நிலத்தினை ஆண்டு ஒன்றுக்கு ஒரு சதுர மீட்டர் பரப்பிற்கு ரூ.1/– வீதம் வாடகை வசூலித்துக் கொண்டு அத்தனியார் நிறுவனத்திற்கு

வழங்க மறு தீர்மானம் நிறைவேற்றியுள்ளது என்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. மேற்காணும் சூழ்நிலையில், செட்டிச்சாவடி கிராம ஊராட்சிப் பகுதியில் சேலம் மாநகராட்சியின் திடக்கழிவு மேலாண்மைத் திட்டப்பணிக்காக நில அளவை எண்.6/2 ல் 40.490 ஹெக்டேர் (100 ஏக்கர்) “கரடு“ புறம்போக்கு நிலத்தில் முதற்கட்டமாக, 25 ஏக்கர் நிலப்பரப்பில் கட்டி, இயக்கி, ஒப்படைத்தல் (Build-Operate-Transfer) முறையில் “குஜராத் சுற்றுச் சூழல் தடுப்பு மற்றும் உள்கட்டமைப்பு நிறுவனம், சூரத் (M/s Gujarat Evironment Protection and Infrastructure Ltd, Surat) என்ற நிறுவனம் மூலம் செயல்படுத்தப்படவுள்ள திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்திற்காக ஒரு சதுர மீட்டர் நிலப்பரப்பிற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.1/– வீதம் கணக்கிட்டு ஆண்டு வாடகையாக ரூ.1,11,525/– (ரூபாய் ஒரு இலட்சத்து பதினோராயிரத்து ஐநூற்று இருபத்தைந்து மட்டும்) இருபது ஆண்டுகளுக்கு குத்தகைத் தொகையினை மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை அதிகரிக்காமல் செயல்படுத்த அரசாணை (நிலை) எண்.25 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.25.02.2000–லிருந்து இந்நேர்வினை சிறப்பினமாக கருதி விலக்களித்து, சேலம் மாநகராட்சி ஆணையருக்கு அனுமதி வழங்க நகராட்சி நிர்வாக இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்படுகிறது.

4. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.1505/FS/P/2010, நாள் 18.06.2010–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

/ஆளுநரின் ஆணைப்படி /

நிரஞ்சன்மார்டி,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–5.
ஆணையாளர், சேலம் மாநகராட்சி, சேலம்.
மாவட்ட ஆட்சித் தலைவர், சேலம் மாவட்டம், சேலம்.
மாண்புமிகு முதலமைச்சரின் செயலரின் தனிச்செயலர், சென்னை–9.
மாண்புமிகு துணை முதலமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை –9.
நிதித்துறை.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை–9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2)துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர்